
# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

## பழநி

## திருக்கார்த்திகைத் திருவிழா அழைப்பிதழ் – 2017



விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே

– கந்தரலங்காரம்



உ

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

## பழநி

## திருக்கார்த்திகைத் திருவிழா அழைப்பிதழ் - 2017

## திருக்கார்த்திகை தீபம் 2.12.2017

tnhrce.org

பேரன்புடையீர் !

பேரருட் சோதியாய் ஞான தண்டாயுதபாணியாய் விளங்கிடும் திருமுருகன் சரவணப் பொய்கையில் ஆறு செந்தாமரை மலர் போல ஆறு குழந்தைகளாய்த் தவழ்ந்த போது நான்முகனும், நாராயணனும் வேண்ட கார்த்திகைப் பெண்டிரால் பாலூட்டப் பெற்றமையால் "கார்த்திகேயன்" எனும் பெயர் பூண்டான். கலியுக வரதனாய், கண்கண்ட தெய்வமாய்த் திகழ்கின்ற சேயோனின் அருளமிழ்தம் பெற்று ஆன்ம கோடிகள் அனைத்தும் உய்கின்றன. அளப்பரிய புகழ் கொண்ட ஆண்டவனாம் செவ்வேளின் பெருமையினை, பேரருள் திறத்தினை நினைந்து நெஞ்சுருகி வழிபடும் பெருநோக்குடன் திருக்கார்த்திகைத் திருவிழா, நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 சுபஸ்ரீ ஹேவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 10 - ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகைத் திங்கள் 16 - ஆம் நாள் சனிக்கிழமை முடிய (26.11.2017 முதல் 2.12.2017 வரை) நடைபெறும். தெய்வீகத்திருத்தலமாம் பழநியம்பதியின்கண் சிவலிங்க வடிவமாய் விளங்கும் திருமலையில் வீற்றிருக்கும் அருள் வடிவாம் தண்டாயுதபாணி சுவாமிக்கு ரட்சாபந்தனம் செய்து வேள்விச் சாலை அமைத்து திருமுழுக்காட்டியும், திருவமுது படைத்தும் சிறப்பான பூஜையுடன் வழிபாடு செய்யப் பெறும். கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பனிரெண்டும் கொண்ட வள்ளலாம் சண்முகப் பெருமானுக்கு சிறப்பு திருமுழுக்கு, வனப்பு வழிபாடு, சண்முகர் போற்றி ஆகியவை நடைபெறும். ஒவ்வொரு விழா நாள் மாலையிலும் உற்சவமூர்த்தி சின்னக்குமாரர் உலா வந்து அன்பர்கட்குத் திருக்காட்சி வழங்குவார். அன்பர்கள் திரளாக வந்து அருள்மிகு பழநி ஆண்டவர் கழலடி பணிந்து திருவருள் பெற்று இன்ப நலம் எய்திட அன்புடன் வேண்டுகிறோம்.

**இங்ஙனம்**

**சீ. செல்வராஜ்**

இணை ஆணையர் / செயல் அலுவலர் / தக்கார்

**இரா. மேனகா**

உதவி ஆணையர் / நேர்முக உதவியாளர்
துணை ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு)

# திருக்கார்த்திகைத் திருவிழா சமயச்சொற்பொழிவு

இடம் : மலைக்கோயில் திருக்கல்யாண மண்டபம் நேரம் : தினசரி மாலை 6.00 மணி

| வ. எண் | நாள் | கிழமை | சொற்பொழிவாளர் | பொருள் |
|---|---|---|---|---|
| 1. | 26.11.2017 | ஞாயிறு | பேராசிரியர். மயிலம் வேல் கார்த்திகேயன்<br>பாரதிதாசன் அரசு மகளிர் கலைக்கல்லூரி, புதுச்சேரி. | " அனுபூதி அழகன்" |
| 2. | 27.11.2017 | திங்கள் | திருமதி. கி. சந்தானலட்சுமி<br>முதகலை பட்டதாரி ஆசிரியை, அருள்மிகு பழனியாண்டவர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பழநி. | "கந்தர் அலங்காரம்" |
| 3. | 28.11.2017 | செவ்வாய் | நல்லாசிரியர். திரு. எஸ். திருமலைசாமி, பழநி. | "திருப்புகழ் செல்வர் அருணை முனிவர்" |
| 4. | 29.11.2017 | புதன் | திரு. த. முத்தரசு, குலசேகரபட்டினம், தூத்துக்குடி. | "அலங்காரத்தில் முருகன்" |
| 5. | 30.11.2017 | வியாழன் | ஜோதிடர். திரு. சக்திமணி<br>சத்திரப்பட்டி. | "அன்பெலாம் முருகன்" |
| 6. | 01.12.2017 | வெள்ளி | திரு. வெ. முருகேஷ் பாண்டியன்<br>அருப்புக்கோட்டை, விருதுநகர். | "கார்த்திகை விரதம்" |
| 7. | 2.12.2017 | சனி (காலை 10.00 மணி) | திருமதி. கி.செல்விமகேந்திரன், தமிழ்ப்புலவர்,<br>அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி | "அருள் எல்லாம் முருகனே" |

## பிளாட்டினம் அட்டைத் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருக்கோயிலுக்கு ரூ. 1 கோடி மற்றும் அதற்கு மேல் நன்கொடை வழங்குவோர்க்கு "பிளாட்டினம் அட்டை" வழங்கப்படும். அப் "பிளாட்டினம் அட்டை" மூலமாக நன்கொடையாளர் குடும்பத்தார் தமிழகத்தின் அனைத்து திருக்கோயில்களிலும் 10 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்கு சிறப்பு தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

## வைர அட்டைத் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அன்னதானத் திட்டத்திற்கு குறைந்தபட்சம் ரூ. 7 லட்சம் நன்கொடை வழங்குவோர்க்கு "வைர அட்டை" வழங்கப்படும். அவ் "வைர அட்டை" மூலமாக தமிழகத்தின் அனைத்து திருக்கோயில்களிலும் நன்கொடையாளர் குடும்பத்தார் 7 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்கு சுவாமி தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

## "அன்னதானத் திட்ட நன்கொடை வேண்டுகோள் அறிவிப்பு"

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்

இத்திருக்கோயிலில் 13.09.2012 முதல் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் 100 நபர்களுக்கான அன்னதானத் திட்டம் 23.02.2002 முதல் தொடங்கப்பட்டும், பின்னர் நாள்முழுவதும் அன்னதான திட்டம் 13.09.2012 தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. 100 நபர்களுக்கான அன்னதானத் திட்டத்தில் பங்கு பெறுபவர்கள் அன்னதானத் திட்டம் கட்டளை முதலீடாக ரூ. 25,000/- மற்றும் முதலாம் ஆண்டு அன்னதான செலவுத்தொகையாக ரூ. 2,500/-ம் ஆக மொத்தம் ரூ. 27,500/- செலுத்தி இத்திட்டத்தில் பங்கு கொள்ளலாம்.

அன்பர்கள் தங்களுடைய பிறந்த நாள், திருமண நாள், மனைவி, மக்கள் மற்றும் பெற்றோர்கள் பிறந்த நாள் போன்ற முக்கிய நாட்களிலும் மற்றும் அவரவர் விரும்பும் நாட்களிலும் அன்னதானம் செய்வதற்கு இத்திட்டத்தில் பணம் செலுத்தி அன்னதானம் செய்யலாம்.

இத்திட்டத்திற்கு வழங்கும் நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டப்பிரிவு 80(G) வரிவிலக்கு உண்டு.

நன்கொடை - வங்கி வரைவோலைகள் அனுப்பவேண்டிய முகவரி:

**இணை ஆணையர்/செயல் அலுவலர்**

**அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,** பழநி-624 601. திண்டுக்கல் மாவட்டம்.

திருக்கோயில் : Website : palanimurugantemple.tnhrce.in Ph: 04545 242236 Email : palanimurugan@tnhrce.org Fax : 04545 247765

tnhrce.org


tnhrce.org

